பாம் பிரிண்ட்
சுவடி
SUVADI
ஏடு 1 ஓலை 5



'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

கவர்ச்சிகரமான வடிவமைப்புகள்!
நியாயமான விலை!
உறுதியளித்த நேரத்தில்!
பாம் பிரிண்ட்
அச்சுக் கலையகம்
416.284.9545
palmprint.ca
palmprintinfo@gmail.com
1345 Morningside Ave #8

# நீங்களும் சட்ட வல்லுனர் ஆகலாம்!

சட்டம் என்று ஒன்று இருந்தால், அதற்கு எப்படிக் கட்டுப்பட்டு நடப்பது என்பதை விட, அதை எப்படி புத்திசாதுர்யமாக மீறுவது என்ற குறுக்குமூளை எங்கள் பண்பாட்டில் பின்னிப் பிணைந்தது.

சட்டம் ஒரு இருட்டறை என்பது தமிழ்ப்(பட) பழமொழி என்பதாலோ என்னவோ, சட்டவிரோதமாய் எதையாவது செய்தால் இருட்டில் இருக்கும் சட்டம் எங்களைக் கண்டு கொள்ளாது என்ற எண்ணம் தமிழர்களுக்கு இருக்கக் கூடும். அதையும் மீறி, தமிழர்களுக்குள் மிகவும் அரிதாக இருக்கக் கூடிய நேர்மையாளராக நீங்கள் இருந்தாலும் சில நேரம் சட்டத்தின் உதவி உங்களுக்குத் தேவைப்படலாம். ஆங்கில மொழியைப் புரிவதில் சிக்கல் இருந்தால், அதற்கு படித்துப் பட்டம் பெற்ற தமிழ்ச் சட்டத்தரணிகளை நாடி உதவி பெறவேண்டும்.

இருந்தாலும், சில அடிப்படைக் கேள்விகளைக் கேட்பதற்கு, வழமையான தமிழ்ப் பாணியில் 'உவருக்கு ஏன் வீணாக் காசைக் குடுப்பான்?' என்று, ஊரில் உலாவும் கேள்விச்செவி மேதாவிகளின் அதிபுத்திசாலித்தன புத்திமதிகளால் குழம்பிப் போயிருப்பீர்கள். சில நேரங்களில் களம் கண்ட வேங்கைகளும் சிறை மீண்ட செம்மல்களும் (அதுதான் மனைவியைத் தாக்கிய, கிறடிட் காட் மோசடிகளுக்காக நீதிமன்றத்திற்கு அலைந்த!) தங்கள் அனுபவங்கள் மூலமும் ஆலோசனை சொல்லக் கூடும்.

இப்படியெல்லாம் போய் காசையும், நேரத்தையும் வீணாக்கி அல்லல்படாமல் இருக்க, கனடாவில் உள்ள சட்டங்கள் பற்றியும், அதற்குச் செய்ய வேண்டிய நடைமுறைகள் பற்றியும் மேலோட்டமாக அறிந்து கொள்ள தமிழ் இணையத் தளம் ஒன்று உள்ளது.

http://www.legalline.ca/ என்ற இணையத்தளத்தில் நீங்கள் சட்ட விபரங்களை இலவசமாய் பெறலாம். 65க்கு மேற்பட்ட உலக மொழிகளில் கனடாவின் சகல மாகாணங்களுக்குமான சட்டங்கள் பற்றிய தகவல்கள் இங்கு உண்டு.

இலவசம் என்றால் ஆலாய் பறப்பீர்கள், ஆகா, இனிமேல் லோயரிட்டை அலையத் தேவையில்லை, பிரச்சனையைப் போட்டு கூகிள் அடித்தால், சட்ட ஆலோசனை இலவசமாய் கிடைக்கும் என்று புளகாங்கிதம் அடைவீர்கள் என்பது தெரிந்தது தான். ஆனால் இந்த ஆலோசனை உங்கள் பிரச்சனைக்கான தனித்துவமானது அல்ல, பொதுவானது.

இந்த இணையத்தளத்தின் வலது மேற்பக்க மூலையில் மாகாணத்தையும் மொழியையும் தெரிவு செய்தால், தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்ட சட்ட விபரங்களின் தொகுப்பு உண்டு. கூகிள் மொழிபெயர்ப்பு என்பதால் சில நேரம் விளங்கிக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படலாம். மொழிபெயர்ப்பில் கருத்துக்கள் மாறிப் போகலாம் என்பதையும் நினைவில் வைத்திருங்கள். முடிந்தவரைக்கும் ஆங்கிலத்தில் வாசிக்க முயற்சி செய்யுங்கள்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட சட்டப் பிரச்சனைகளுக்கான, தத்தெடுத்தல் முதல் தவறான வேலைநீக்கம் வரை, திருமணரத்து முதல் போதையில் வாகனம் செலுத்திய குற்றம் வரை, விளக்கங்களும் பரிந்துரைகளும் உள்ளன. ஆனால் இந்தச் சேவையைச் சட்டத்தரணியின் ஆலோசனை என்று கருதி விடாதீர்கள். ஒரு முன்னுரை மட்டுமே.

இந்த விபரங்களைத் தெரிந்து கொண்டு உரிய சட்ட ஆலோசனை பெறுங்கள். அதிலும் சட்டத்தரணிகளும் தமிழர்களே என்பதால், அவர்களுக்கும் குறுக்குமூளை வேலை செய்து, உங்களைச் சட்டத்தின் கோரப் பற்களில் இருந்து, (ஒ.பீ.கோ 304, ஒன்ராறியோ பீனல் கோட், யுவர் ஆனர்?) மீட்கக் கூடும்.

(நம்மவர்கள் அடிக்கடி காரணம் காட்டும், 'நாய், எருமை எண்டு பேசுறார்', 'வீட்டிலை சமைக்கிறேலை' போன்ற காரணங்களுக்காக விவாகரத்துச் செய்யலாமா என்ற விபரங்களைத் தேடிப் பார்த்தோம். கண்ணுக்குத் தென்படவில்லை. உங்களுக்குத் தென்பட்டால் தெரிவியுங்கள். அந்த விபரங்களை அடுத்த சுவடியில் மற்றவர்களுக்குப் பயன்படுமாறு தருவோம்.)

Palm Print Inc
Design & Print
• நினைவு மலர்கள்
• விழா மலர்கள்
• அறிமுக அட்டைகள்
• பிரசுரங்கள்
• திருமண அழைப்பிதழ்கள்
• பதாகைகள்
• சுவரொட்டிகள்
• Copy • Print
• Sign
• Logo Design • Ad Design
416.284.9545
1345 Morningside Ave #8
palmprint.ca
palmprintinfo@gmail.com



## 'பின்' குறிப்பு

தவழ்ந்து, தத்தி நடந்த சுவடி வீறு நடை போடுகிறது.
வாசகர்களிடம் பெறும் அமோக வரவேற்பு உற்சாகம் ஊட்டுகிறது.
மரக்கறிக் கன்று விளம்பரத்திற்குக் கிடைத்த வரவேற்பு தனி.
வாசிக்காமல் வீசி எறியும் பத்திரிகைகள் போலன்றி, தொகுத்து வைக்கும் அளவுக்கு சுவடியின் தரம் இருப்பதாக வாசகர்கள் பாராட்டுகிறார்கள்.
இதழ்களைத் தொகுத்து வைப்பதற்கு வசதியாக நடுவில் அச்சிட வேண்டாம் என்று கேட்டதைக் கவனத்தில் எடுத்திருக்கிறோம்.

சுவடிக்கு பக்கங்களைக் கூட்ட வேண்டும் போலத் தெரிகிறது. இம்முறை இடப் பற்றாக்குறையால் ஏற்கனவே தயாரான ஆக்கங்கள் இடம் பெறவில்லை.
எங்கள் விளம்பரதாரர்களை ஆதரியுங்கள்.
சுவடி, பாம் பிரிண்ட் அச்சுக் கலையகத்தின் விளம்பர வெளியீடு என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மலர்கள், பிரசுரங்கள், அறிமுக அட்டைகள் அச்சிட விரும்புவோரை எங்களிடம் அனுப்பி வையுங்கள். விளம்பரதாரர்களினதும், உங்களதும் ஆதரவு கூடினால், பக்கங்களை அதிகரிக்க முடியும்.
மறக்காமல், உடல் நலம் பெற, நன்றாகத்...
தண்ணீர் குடியுங்கள்!

வீறுநடை போடும் சுவடி

This newsletter is edited, printed and published by Palm Print Inc.
இச்சுவடி பாம் பிரிண்ட் நிறுவனத்தினரால் ஏடு இட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது

# உடல் நலம் பெற நன்றாகத் தண்ணி அடியுங்கள்!

அட... தலையங்கத்திலும் எழுத்துப்பிழை!?

உடல் நலம் பெற நன்றாகத் தண்ணீர் குடியுங்கள்.

தமிழ் மொழியின் வறுமை காரணமாயோ, பிழாவில்கள் குடித்த குடிகாரர்கள் கிளாசில் கசிப்பு குடிப்பதற்கு வசதியாகவோ, தண்ணீர் என்பதற்கு பல கருத்துக்கள் தமிழில் உள்ளன. நிறமே இல்லாத நீருக்கு பச்சை நிறம் சேர்த்தது தமிழ்.

உயிர் வாழ்வுக்கு தண்ணீர் அவசியம் என்று சொன்னால், குடிகாரர்களும் தங்கள் குடிவெறியை நியாயப்படுத்த ஆரம்பிப்பார்கள். பூமிக்கிரகத்தில் தண்ணீர் இருப்பதால் தான் உயிரினங்கள் தோன்ற ஏதுவாக இருந்தது. உடலில் அறுபது வீத நிறை நீராகும். உங்கள் உடலின் செயற்பாடு ஒவ்வொன்றுக்கும் நீர் அவசியம். உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டு செல்வது முதல், உடலின் கழிவுகளை அகற்றுவது வரைக்கும், காது, மூக்கு, தொண்டையை ஈரலிப்பாக வைத்திருப்பது வரைக்கும் நீர் அவசியமானது. அப்பேர்ப்பட்ட பெருமை கொண்ட தண்ணீர் குடிகாரர்கள் கையில் அகப்பட்டு தண்ணியாகி....

அதிருக்கட்டும். ஒரு நாளைக்கு ஒருவர் எவ்வளவு நீர் குடிக்க வேண்டும் என்ற கேள்விக்கு பல விடைகள் கிடைக்கும். (தண்ணிச்சாமிகளிடம் கேட்டால் போத்தல் கணக்கில் பதில் கிடைக்கும்!) ஆனால் மேற்குலகில் ஒருவர் ஒருநாளைக்கு எட்டு அவுன்ஸ் நீர் நிறைந்த எட்டு கிளாஸ் குடிக்க வேண்டும் என்று விதிமுறையாய் நம்பிக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் தேவையான அளவு நீர் என்பது பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. உங்கள் ஆரோக்கியம் முதல் நீங்கள் வாழும் இடம் வரையுமான பல்வேறு காரணிகளில் நீங்கள் குடிக்க வேண்டிய நீரின் அளவு உள்ளது.

உடலில் நீரின் அளவு குறைந்தால் உங்கள் உடல் சக்தி குறைந்து களைப்படையும். சாதாரணமாக சுவாசம், வியர்வை, சிறுநீர், மலம் என்பவற்றூடாக நீர் உடலிலிருந்து வெளியேறுகிறது. அந்த நீரின் அளவை நீர் மூலமாயும், நீர் கொண்ட உணவுகள் மூலமாயும் நிவர்த்தி செய்ய வேண்டும். சராசரியாக, வயதான ஆண்களுக்கு நாளாந்தம் மூன்று லீட்டர் நீரும், பெண்களுக்கு 2.2 லீட்டர் நீரும் அவசியம்.

## நீரை அதிகமாய் அருந்துவதற்கான காரணிகள் எவை?

உடற்பயிற்சி - கடுமையான உடற்பயிற்சி செய்வோர் வியர்வையில் வெளியேறும் சோடியத்தை நிவர்த்தி செய்ய சிறிதளவு உப்புப் போட்டு தண்ணீர் குடிக்கலாம்.

சுற்றாடல் - சூடான காலநிலையால் வியர்வை மூலமாய் நீர் வெளியேறலாம். குளிர்காலத்தில் வீட்டின் உள்ளே உள்ள சூடான காற்று உங்கள் தோலில் உள்ள நீர்த்தன்மையை வெளியேற்றலாம். எட்டாயிரம் அடிக்கு மேற்பட்ட உயரத்தில் இருக்கும்போது அடிக்கடி சிறுநீர் கழிப்பதாலும், அதிகளவு சுவாசத்தாலும் நீர் வெளியேறலாம்.

உடல் நலமின்மை - வயிற்றுப் போக்கு, வாந்தி காரணமாக நீர் வெளியேறலாம். சிறுநீர்ப்பைத் தொற்று, சிறுநீரில் கல் போன்றவற்றால் நீங்கள் அதிகளவு நீர் குடிக்க வேண்டி ஏற்படலாம். ஆனால், இருதயம், சிறுநீரகம், ஈரல் போன்றவற்றில் நோய் இருந்தால் உங்கள் உடலானது நீரை உறுஞ்சும் திறனை இழப்பதால், நீர் குடிப்பதை குறைக்க வேண்டியும் ஏற்படலாம். கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மாரும் அதிகளவு நீர் குடிக்க வேண்டும். கர்ப்பிணிகள் 2.3 லீட்டரும் பாலூட்டும் தாய்மார் 3.1 லீட்டரும் என சராசரி நீர் குடிக்க வேண்டும்.

ஆனால் உடலுக்குத் தேவையான நீர் திரவ வடிவத்தில் தான் இருக்க வேண்டும் என்றில்லை. வழமையில் உணவுகளில் இருபது வீதம் நீர். அதிலும் பழங்கள், மரக்கறிகளில் அதிகளவு நீர் உள்ளது. பால், ரசங்கள் என்பவற்றிலும் நீர் உள்ளது. குடிவகைகள், கோப்பி, தேநீர் போன்றவற்றில் நீர் அதிகளவு இருந்தாலும் அவற்றை அதிகளவு குடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நீர் தவிர்ந்த மற்றவற்றில் அதிகளவு கலோரிகள் உள்ளதால், அவற்றைத் தவிர்த்து நீரை அதிகளவு அருந்துததல் நன்று.

நீரிழப்பைத் தவிர்க்கவும், உடலுக்கு தேவையான அளவு நீரைப் பெறவும், சாப்பாட்டின் போதும், உடற்பயிற்சிக்கு முன், பின்னாலும் நீர் அருந்துங்கள்.

ஆனாலும் நீரை அளவுக்கு அதிகமாக அருந்தக் கூடாது. சமீபத்தில் ஐரோப்பிய நாடொன்றில், பழைய மாணவர்களால் மிரட்டப்பட்ட புதிய மாணவன் ஒருவன் அதிகளவு நீர் குடித்து இறக்க நேரிட்டது. உங்கள் சிறுநீரகம் மேலதிக நீரை வெளியேற்ற முடியாவிட்டால், இரத்தத்தில் உள்ள உயிர்ச்சத்துக்களின் செறிவு குறைகிறது. இதனால் இரத்தத்தில் சோடியத்தின் அளவு குறைகிறது. சோடியம் தான் கலங்களின் உள்ளேயும் வெளியேயும் உள்ள நீரின் அளவைக் கட்டுப்படுத்துவதால், உடற் கலங்கள் வீங்க ஆரம்பிக்கின்றன. இதனால் உயிர் ஆபத்தும் ஏற்படலாம்.

எனவே குடிகாரர்களின் தண்ணியைப் போல, தண்ணீராலும் ஆபத்து நேரிடலாம்.

எனவே தாகத்துக்கு தண்ணியடிக்கப் போய், ஆபத்தில மாட்டிக்கிடாதீங்க!

பிரஜா உரிமை
வதிவிட உரிமை
பத்திரங்கள் நிரப்புதல்
ஆவண மொழிபெயர்ப்பு
Super Visa
416.269.5883
Citizenship
PR Forms
Sponsorship Forms
Translation Services

## கணனிக்குள் நுழையும் காட்டிக் கொடுக்கும் உளவாளிகள்!

இணையத்தின் மீதுலாவி வரும் போது, அவ்வப்போது அகிழான் புற்றுக்குள்ளால் எழுந்து வருவது போல, ஜன்னல்கள் தோன்றி, வைரஸ் பாதுகாப்பு, கணனிப் பாதுகாப்பு, கணனியை வேகமாக்கல், குறுவட்டுக்களை பிரதிசெய்தல் போன்றவற்றிற்கு இலவசமாய் மென்பொருட்களை தருவதாக கூறி, தரவிறக்கம் செய்யுமாறு வற்புறுத்தும். ஆகா, ஓசியில் வலிய வந்த சீதேவியை விடுவானேன் என்று ஓகே அடித்திருப்பீர்கள். தரவிறக்கம் செய்த பின்னால், உங்கள் கணனியின் மேசையையே அந்தப் புதிய மென்பொருள் மாற்றியமைத்து, அவ்வப்போது தங்கள் பொருட்களை விலைக்கு வாங்குமாறு தொல்லை கொடுக்கும். அதை விட, உங்களின் நடவடிக்கைளை, அதுதான் எந்த இணையத் தளங்களை பார்வையிடுகிறீர்கள், என்ன பொருட்களை வாங்குகிறீர்கள் என்ற தகவல்களைத் திரட்டி அனுப்பக் கூடிய இரகசிய உளவாளிகளை உள்ளே இறக்கியிருக்கும். இந்த உளவாளிகள் உங்கள் கணனியை பயன்படுத்த, கணனி வேகம் குறைந்து மெதுவாக நகரத் தொடங்கும். நீங்கள் கேள்விப்பட்டிராத நிறுவனங்கள் எல்லாம் தங்கள் பொருட்களை வாங்குமாறு தலையிடி கொடுக்க...

வலிய வந்த சீதேவி இப்போது மூதேவி ஆகி, எப்படி விரட்டலாம் என்று வழி தேடுவீர்கள்.

முதலாவது, ஓசியில் கிடைக்கிறது என்பதற்காக எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள நினைக்காதீர்கள். துன்பத்தை விலை கொடுத்து வாங்குவதை விட மோசமானது இது. உங்களுக்குப் பயன்படக் கூடியது, தேவையானது என்பவற்றை மட்டும் தரவிறக்கம் செய்யுங்கள். காரணமில்லாமல், தங்களுக்கு லாபம் கிடைக்காமல் தருவதற்கு ஓசியில் தருபவர்கள் என்ன தெய்வங்களா?

தரவிறக்கம் செய்து உங்கள் கணனியில் install செய்யும்போது, Custom installation என்பதையே தெரிவு செய்யுங்கள். Standard Installation இல் உங்களுக்குத் தெரியாமல் அவர்கள் பல உளவாளிகளை மறைத்திருப்பார்கள். Custom Installation இல் யார் யார் உள்ளே வர விரும்புகிறார்கள் என்பதைப் பார்த்து, தேவையானவர்களை மட்டும் உள்ளே விடலாம். "Standard Installation," "the Express Installation," "the "Default Installation," "(recommended) Advanced installation" என எது வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாதீர்கள். Custom Installation தரும் தெரிவுகளில் தேவையற்றவற்றை uncheck செய்யுங்கள்.

சில நேரம் அவர்களாகவே தெரிவுகளுக்கு சரி குறியிட்டு, மற்றவற்றை சாம்பல் நிறத்தில் வைத்திருப்பார்கள். அது செயற்படாது என்பது போல. உங்கள் எலிக் குஞ்சை மேலே கொண்டு போய் அதைத் தெரிவு செய்யுங்கள்.

முடிவில் End User License Agreement எனப்படும் சட்ட விதிகளைக் கொண்டு வந்து அதை ஏற்றுக் கொள்கிறேன் என்பதைத் தெரிவு செய்யுமாறு கேட்கும். ஆனால் அதைக் கவனித்து வாசிப்பீர்களாயின் அதில் அவர்கள் செய்யும் குளறுபடிகள் எல்லாம் இருக்கும். அதை மறுத்துப் பாருங்கள். சில நேரம் உங்களுக்கு தேவைப்படும் மென்பொருள் மட்டுமே தற்போது உங்கள் கணனிக்குள் வர முடியும். அவ்வாறு மறுக்க அனுமதிக்கா விட்டால்,'போய்யா, நீயும் உன் ஓசியும்' என்று நடையைக் கட்டுங்கள்.

வானத்தில் போன சனியன்களை ஏணி வைத்து இறக்கியது போல தொல்லைப்படாதீர்கள்.


ஒரு வீட்டை மாளிகையாக்குவது தளபாடங்களே!
உங்கள் வீட்டை மலிவு விலையில் மாளிகையாக்க..
Sunflowers furniture
3024 Kennedy Rd
416.609.8556


## மகாராணியிடம் விருது பெறுங்கள்!

உங்கள் வீட்டில் உள்ள வயதானவர்களின் பிறந்த நாள், திருமண நாளுக்கு மகாராணி, பிரதமர், தேசாதிபதி, மாகாண முதல்வர், மாகாண ஆளுனர் போன்றவர்களிடம் இருந்து வாழ்த்துக்கள் பெற முடியும்.

நூறு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எலிசபெத் மகாராணியாரே பிறந்த நாள் வாழ்த்து அனுப்பி வைப்பார். எட்டு வாரங்களுக்கு முன்பாக, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

90 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தேசாதிபதி, மாகாண ஆளுனர் நாயகம் வாழ்த்துக்களை அனுப்புவார்கள்.

65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பிரதமர் வாழ்த்து அனுப்புவார். 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒன்ராறியோ மாநில முதல்வர் வாழ்த்துக்கள் அனுப்புவார்.

திருமண நினைவுதினங்கள் போன்றவற்றிற்கும் இவர்கள் வாழ்த்துக்கள் அனுப்பி வைப்பார்கள். திருமணம் செய்து அறுபது வருடங்களுக்கு மேல் இணைந்து வாழும் தம்பதிகளுக்கு மகாராணியார் வாழ்த்துக்கள் அனுப்புவார். ஐம்பது வருடங்களுக்கு மேல் திருமணமானோருக்கு தேசாதிபதியும், மாகாண ஆளுனரும் வாழ்த்துத் தெரிவிப்பார்கள். 25 வருடம் திருமண வாழ்வை நிறைவு செய்தோருக்கு பிரதமரும் 40 வருடங்கள் இணைந்தோருக்கு ஒன்ராறியோ மாகாண முதல்வரும் வாழ்த்து அனுப்புவார்கள். இவற்றுக்கு மூன்று முதல் எட்டு வாரங்களுக்கு முதல் நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். சில நேரங்களில் பிறப்பு மற்றும் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்ப வேண்டும். இணையத்திலேயே நீங்கள் இதற்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யலாம்.

http://www.lgontario.ca/en/contact-and-info/pages/order-greetings.aspx என்ற இணையத் தள முகவரியில் நீங்கள் இது பற்றிய மேலதிக தகவல்களையும் விண்ணப்பப் பத்திரங்களையும் பெறலாம்.

பலரிடம் இருந்து ஒரே தடவையில் வாழ்த்துக்களைப் பெற, உங்கள் பகுதி மாகாண உறுப்பினரையோ, சமஷ்டிப் பாராளுமன்ற உறுப்பினரையோ நாடுங்கள். அவர்கள் உங்கள் சார்பில் விண்ணப்பித்து வாழ்த்துக்களை ஒரேயடியாகப் பெற வைப்பார்கள்.

இவை முற்றிலும் இலவசமானவையே.

மிச்சமாய் தமிழர் எவருமே இல்லாதபடிக்கு உலகத்தில் உள்ள விளம்பரதாரர்கள், முகவர்கள், இலக்கியப் பிரகிருதிகள் எல்லோருக்கும் கொஞ்சத் தமிழர்கள் அன்னதானம் போல அள்ளி அள்ளி விருது தானம் செய்து தொலைக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாளில் மகாராணிக்கே இவர்கள் விருது கொடுக்கக் கூடும்.

அதற்கு முன்னால், நீங்கள் உங்களதும் உங்கள் துணையினதும் பெற்றோர்களுக்கு மகாராணியிடமிருந்தே வாழ்த்து வாங்கிக் கொடுங்கள். அவர்கள் அவற்றைப் பிரேம் பண்ணி பெருமை கொள்வார்கள்.

## வீட்டுக்காரிக்கு ஒரு வைப்பு


கழுத்து, தோள்பட்டை, முதுகு, முழங்கை, மணிக்கட்டு, முழங்கால், கணுக்கால் வலிகளுக்கான சிகிச்சை நிலையம்
1345 Morningside Ave #17
AAA WELLNESS & REHAB
647.518.7472 -24 hrs Text line
416.283.7472
பிசியோதெராபி,கைரோபிராக்ரிக், அக்கியூபங்சர், பாதச் சிகிச்சை, மசாஜ், ஸ்பா


வீடு வாங்கித் தர, உங்கள் தரகர் வார இறுதிகளில் உங்களை குடும்ப சமேதரராய் வீடு வீடாய் ஏற்றிப் பறிக்க, ஒருவாறாக உங்கள் கற்பனையில் வடிவெடுத்த மாளிகையைத் தேடிப் பிடித்திருப்பீர்கள். தேடிப் பிடித்தால் மட்டும் போதுமா? வீட்டில் மாமி, மாமா, மைத்துனர்கள் என்று எல்லோருக்கும் பிடிக்க வேண்டுமே (திருமணம் முடித்த பின்னால், விளக்கேற்ற வந்த மகாலட்சுமிகளால் அம்மா, அப்பா, சகோதரர்கள் மெதுவாகக் கழற்றப்பட்டிருப்பார்கள்!) என்று, அவர்களையும் அழைத்துச் சென்று காட்டி, அவர்களும் தங்களுக்கான அறைகள் விசாலமாய், கட்டிலில் படுத்திருந்தபடியே விஜய் டி.வி பார்க்கும் வசதிகள் எல்லாம் உண்டா என்று செக் பண்ணி ஓகே தருவதற்குள், காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போன மாதிரி, வேறு யாராவது வீட்டைக் கொண்டு போய்ச் சேர்த்திருப்பார்கள்.

வீட்டை உங்களுக்கு மட்டும் தான் விற்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்கு, வீட்டுக்காரிக்கு அச்சவாரம் கொடுக்க வேண்டும்.

அட, அந்த வடிவேலன் மனசு வைச்சுக் கொடுக்கிற அச்சாரம் இல்லை!

வைப்புத் தொகை.

அட, இதென்ன தலையிடி, தமிழில் சொற் பஞ்சம்.

வைப்பு என்றால் கருத்து வேறு என்கிறார்கள்.

ஓகே. வீட்டுக்காரிக்கு டிப்போசிட்!

இந்த வைப்புத் தொகை அச்சாரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டால் தான் வீடு உங்களுக்கு விற்கப்படலாம். இல்லாவிடில், வீட்டுக்காரி, காத்திருந்த வேறு யாருக்காவது வைப்பு...! இதென்ன வம்பு?!

ஒன்ராறியோவில் வீடு வாங்கும் ஒப்பந்தப்படி, வீடு வாங்கப் போவதாக நீங்கள் எழுதிக் கொடுக்கும்போது, (Offer) நீங்கள் வைப்புத்தொகையைச் செலுத்தலாம். அல்லது வீட்டுக்காரி உங்களது Offer ஐ ஏற்றுக் கொண்ட 24 மணி நேரத்திற்குள் செலுத்தலாம். அந்த வீட்டை வாங்க பலர் போட்டி போட்டுக் கொண்டிருந்தால், உடனடியாகவே வைப்புத் தொகையைச் செலுத்தும்படி வீட்டுக்காரி கேட்கலாம்.

(அதென்ன, வீட்டுக்காரி என்ற கேள்வி எழலாம்.

1.சமத்துவம் கோரும் பெண்ணிய, புத்தி ஜீவிகளுக்காக...

2.வீட்டு மகாலட்சுமிகள் தானே பெரும்பாலான முடிவுகளை எடுக்கிறார்கள்! வீட்டில் யார் இருக்கிறார்கள் என்பது முதல் யாருக்கு வீடு விற்கப்படும் என்பது வரைக்கும்!)

உங்கள் offer ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னால், ஏதாவது காரணங்களுக்காக, (மாமிக்கு மாடிப்படி ஏறி இறங்க முடியாது போன்ற) மனதை மாற்றி, வைப்புத் தொகையை செலுத்த மறுத்து தப்பித்துக் கொள்ள முடியாது. வீட்டுக்காரி வீட்டை பின்னர் வேறு யாருக்காவது மலிவாக விற்க நேரிட்டால், ஏற்பட்ட நட்டம், சட்டச் செலவுகள் போன்றவற்றை உங்களிடம் கோரி வழக்குத் தொடரலாம்.

சில நேரங்களில் வைப்புத் தொகை கட்டத் தாமதமானால், உங்களுக்கு வீட்டை விற்க வீட்டுக்காரி மறுக்கலாம். வேறு யாராவது அதிக விலை கொடுக்கக் காத்திருந்தால் இது சாத்தியம். வைப்புத் தொகையைத் திரட்ட கால அவகாசம் தேவைப்பட்டால், Offer இல் அதைத் தெரிவியுங்கள்.

ரொறன்ரோ பகுதியில் ஐந்து வீதம், பிராம்ப்டன் பகுதியில் இரண்டு வீதம், ஒன்ராறியோவில் சில இடங்களில் சில நூறு டொலர்களையும் என அச்சாரமாகக் கொடுக்கலாம். இதெல்லாம் வீட்டுக்காரியுடன் ஒப்பந்தத்தின் போது முடிவு செய்யலாம்.

நீங்கள் கொடுக்கும் பணம், விற்பனை முகவரிடம் தான் நம்பிக்கைக் கணக்கில் வைப்பாக வைக்கப்படுகிறது. காரணம் நீங்கள் கொடுக்கும் பணத்துடன் வீட்டுக்காரர் தலைமறைவாகலாம். வங்குரோத்தாகலாம். வாங்கும் உங்களுக்குப் பாதுகாப்புக் கிடையாது. விற்பனை முகவரின் நிறுவனம் வங்குரோத்தானாலும், நீங்கள் பணத்தைப் பெறக் கூடியதாக காப்புறுதிப் பாதுகாப்புகள் உண்டு.

சில நேரம் வீட்டுப் பரிசோதனையின் பின்னால், வீடு உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம். ஆனால் வீட்டுக்காரி உங்கள் வைப்புப் பணத்தைத் தர மறுக்கலாம். வீட்டுச் சோதனையைச் சாட்டாக வைத்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறீர்கள் என்று வாதிடலாம். நீங்களும் வீட்டுக்காரியும் ஒருமித்த முடிவுக்கு வந்தால் வைப்புப் பணம் சுலபமாகக் கிடைக்கும். இல்லாவிட்டால், வீட்டுக்காரி இழுத்தடிக்க, நீதிமன்றம் ஏறி வழக்காட நேரிட்டு, நீதிபதியின் முடிவின் பின்னால் தான் பணம் உங்கள் கைக்கு கிடைக்கலாம். அல்லது பறிபோகலாம். இதற்கு சில நேரம் சில வருடங்களும் எடுக்கலாம். அதுவரைக்கும் அந்தப் பணம் முகவரின் நிறுவனத்தின் நம்பிக்கைக் கணக்கில் இருக்கும். (Trust Account)

புத்திசாலித்தனமாக இரண்டு வைப்புகளை நீங்கள் வைத்து... சே... டிப்போசிட்டுகளை நீங்கள் கட்ட சம்மதிக்கலாம். முதலில் offer ஏற்றுக் கொள்ளப்படும்போது, ஒரு வீதமும் பின்னர் வீடு பரிசோனை போன்ற நிபந்தனைகள் திருப்தி பெறும்போது மீதித் தொகையையும் கட்டலாம்.

இதையெல்லாம் ஒப்பந்தம் கொடுக்கும்போதே செய்து கொள்ளுங்கள். பின்னால் மனதை மாற்றப் போய் ஆபத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

அதுசரி, இந்தத் தலையிடிகள் நீங்கி, பொங்கி வீடு குடி புகும்போது, உங்கள் பெற்றோரையும் சகோதரர்களையும் அழையுங்கள்.

பெற்றவர்கள் மனம் நிறைந்து தரும் ஆசீர்வாதத்திற்கு இணை ஏதுமில்லை.

சில நேரம், அவர்களை பாதாள அறையில் குடிபுகுத்தி வாடகை வாங்க மகாலட்சுமிகள் வளையம் போடக் கூடும்.

மாமியோடு மருமகள் கொஞ்சிக் குலாவும் போது இடையில் நீங்கள் எதற்கு?


வீடு - கனவிலிருந்து கைக்கெட்டிய தூரத்திற்கு!
Leo Swampillai
Sales Representative
Homelife/Future
Realty Inc.Brokerage*
Bus:905.201.9977
416.347.8732
leo33@rogers.com